

# தேர்தல் உத்தரவாதம்

# 2026

# பெண்கள், குழந்தைகள், முதியோர் பாதுகாப்புக்கு தனி இலாக்கா




பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோருக்கென தனி இலாக்கா உருவாக்கப்படும். அந்த இலாக்கா எனது நேரடிக் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் இருக்கும். சமரசமற்ற பெண்கள் பாதுகாப்பை நோக்கிப் பயணிக்கும் நம் கனவு நனவாவது உறுதி என்பதை நமது தேர்தலின் முதல் வாக்குறுதியாகச் சொல்வதில் பெருமை கொள்கிறோம்.

---

# மதிப்புமிகு மகளிர் திட்டம்




60 வயது வரை உள்ள அனைத்துக் குடும்பத் தலைவிகளுக்கும் மாதம் 2500 ரூபாய் வழங்கப்படும் என்பதைப் பெருமகிழ்வுடன் அறிவிக்கிறோம். இதில் மாநில மற்றும் ஒன்றிய அரசு ஊழியர்களாக இருப்பவர்களின் குடும்பங்களுக்கு மட்டும் விதிவிலக்கு. இப்படிச் செய்வதால் கூடுதலான குடும்பங்கள் பயனடையும் வாய்ப்பு அதிகரிக்கும் என்பதை நம் தாய்மார்கள் அனைவரும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வர் என்பது நமக்குத் தெரியும்.

---

# அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டம்




இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் வருடத்திற்கு ஆறு கேஸ் சிலிண்டர்கள் கட்டணமின்றி வழங்கப்படும். நம்மைச் சீராட்டி வளர்த்த நம் தாய்மார்கள் வயிற்றில் பால் வார்க்கும் திட்டமாக இதை அறிவிப்பதில் தமிழக வெற்றிக் கழகம் தலைநிமிர்ந்து பெருமைகொள்கிறது.

---

# அண்ணன் சீர் திட்டம்




நம் தங்கைகளின் திருமணத்திற்காக எட்டு கிராம் (ஒரு பவுன்) தங்கமும், தரமான பட்டுச் சேலையும் தாய் வீட்டிலிருந்து அண்ணன் சீராக அளிக்கப்படும். இப்படியான அந்த மகிழ்வில் பங்கேற்பதில் தமிழக வெற்றிக் கழகமும் நாமும் பெரும் மகிழ்ச்சி அடைவதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

# காமராஜர் கல்வி உறுதித் திட்டம்




ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை எந்தக் குழந்தையும் கல்வி இடைநிற்றலே இல்லாமல் செல்வதற்காக ஒவ்வொரு தாய்க்கும் அல்லது பாதுகாவலருக்கும் ஆண்டுதோறும் 15,000 ரூபாய் பொருளாதார உதவித் தொகையாக வழங்கப்படும்.

---

# வெற்றிப் பயணம் திட்டம்




அரசுப் போக்குவரத்தின் அனைத்துப் பேருந்துகளிலும் பெண்கள் கட்டணமின்றி பயணிக்கும் வகையில் உத்தரவிடப்படும். இதன் மூலம் தமிழகத்தின் எந்த மூலையிலிருந்தும் எந்த இடத்திற்கும், தமிழகத்தின் எந்தவொரு மாவட்டத்திலிருந்தும் மற்றொரு மாவட்டத்திற்கும், அனைத்து பகுதிகளுக்கும் பெண்கள் அனைவரும் கட்டணமின்றி பயணிக்கலாம். மேலும், பேருந்துக்காகக் காத்துக் கிடக்க வேண்டிய அவசியமும் ஏற்படாத சூழலை உருவாக்குவோம்.

---

# ஜீரோ டாலரன்ஸ் கிரைம்ஸ் (Zero Tolerance Crimes)




பெண்களுக்கு எதிரான குற்றமே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் 'Zero Tolerance for Crimes Against Women' என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பது நம் மிகப்பெரிய கனவு, நம்முடைய விருப்பம்.

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'ராணி வேலுநாச்சியார் படை' ஏற்படுத்தப்படும். சாதாரண உடையில் இருக்கிற இந்தப் படையைச் சேர்ந்த பெண்கள் 'பாடி கேம்' (Body Cam) உடன் ஆங்காங்கே பாதுகாப்புப் பணியில் இருப்பார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 500 குழுக்கள் அமைக்கப்பட்டுப் பெண்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

---

# அஞ்சலை அம்மாள் அதிவிரைவு பெண்கள் நீதிமன்றங்கள்




பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை விசாரித்து விரைவாக நீதி வழங்க 'அஞ்சலை அம்மாள் அதிவிரைவு பெண்கள் நீதிமன்றங்கள்' அமைக்கப்படும். இந்த 'பாஸ்ட் ட்ராக்' (Fast Track) நீதிமன்றங்களில் பெண்களுக்கு எதிரான வழக்குகள் எதுவும் இனி நிலுவையில் இல்லாத நிலை ஏற்படும். விசாரணை முறையாக நடத்தப்பட்டுத் தீர்ப்பும் விரைவாக வழங்கப்படும்.

---

# ஜீரோ டார்க் ஸ்பாட்ஸ்' (Zero Dark Spots)




24/7 இயங்கும் மத்திய கட்டளை மையத்துடன் (Centralized Command Center) இணைக்கப்பட்ட அவசர காலப் பொத்தான்கள் (Panic Buttons), தனியார் ஷேர் ஆட்டோக்கள் உட்பட அனைத்துப் பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் பொருத்தப்படும். இந்தப் பொத்தான்கள் வழியாக ஐந்து நிமிடத்தில் பதிலும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும். சிசிடிவி கேமராக்களும் விளக்குகளும் வெளிச்சமும் இல்லாத இடங்களே இல்லை என்ற வகையில் 'ஜீரோ டார்க் ஸ்பாட்ஸ்' (Zero Dark Spots) உருவாக்கப்படும்.

பெண்கள் பாதுகாப்பை 24/7 கண்காணிப்பு செய்ய முடியுமா என்ற கேள்விக்கான பதிலாக, அதிநவீன கட்டளை மையங்கள் (State of the Art Command Centers) அமைத்து, சிசிடிவி நெட்வொர்க்குகளைக் கண்காணிக்கவும், அவசர நிலைகளை அந்த நேரத்திலேயே கவனிக்கவும், அதற்கான விரைவான பதிலை உறுதி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

---

# விலையில்லா சானிட்டரி பேட்ஸ்




பெண்களுக்கு மிகவும் தேவையான நாட்களில், பொது விநியோகம் நடக்கும் இடங்களான ரேஷன் கடைகள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகள் மூலம் அனைத்துப் பெண்களுக்கும் விலையில்லா சானிட்டரி பேட்ஸ் (Sanitary Pads) வழங்குவது உறுதி செய்யப்படும்.

---

# சிங்கப் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்




நிலுவையில் உள்ள கடன்களைத் திருப்பிச் செலுத்துவதன் மூலமும், பெண்கள் நடத்தும் சுய உதவிக்குழுக்களுக்கு ஐந்து லட்சம் வரை வட்டியில்லா நிதியை வழங்குவதன் மூலமும் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படும். சுய உதவிக்குழுக்களிலிருந்து பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களாக (MSMEs) மாறுபவர்களுக்கு ஆண்டுதோறும் 5 லட்சம் வழங்கப்படும்; அதாவது 100% மானியமாகவே வழங்கப்படும்.

---

# தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்




தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளை வரவேற்கும் திட்டம்தான் 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்'. தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் அரசாங்கத்தின் ஆசீர்வாதமாக ஒரு தங்க மோதிரம் வழங்கப்படும். கூடவே ஒரு 'பேபி வெல்கம் கிட்' (Baby Welcome Kit) வழங்கப்படும். ஊட்டச்சத்துப் பொருட்கள், பேபி டிரஸ்ஸஸ், தரமான பேபி சோப்ஸ், பேபி ஆயில், பேபி பவுடர், பேபி கொசுவலைகள், பொம்மைகள், நாப்கின்ஸ் மற்றும் டயப்பர்கள் இவை எல்லாம் அந்த பேபி வெல்கம் கிட்டில் இருக்கும்.

---

# போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு




கடுமையான சட்டங்கள், சமூகக் காவல் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்கள் மூலம் தமிழகத்தைப் போதைப்பொருள் இல்லாத மாநிலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

---

# கல்வி உத்தரவாதம் திட்டம்




நிதிப்பற்றாக்குறையால் இளைஞர்களின் கல்வி தடைபடாமல் இருக்க, 12-ஆம் வகுப்புக்குப் பிறகு பிஹெச்டி (Ph.D) வரை கல்வி பயில ரூபாய் 20 லட்சம் வரை பிணையமில்லா (Collateral Free Loan) கடன் உறுதி செய்யப்படும்.

---

# தமிழ்நாடு ரெக்ரூட்மெண்ட் அக்கவுண்டபிலிட்டி அண்ட் டிரான்ஸ்பரன்சி ஆக்ட் (Tamil Nadu Recruitment Accountability and Transparency Act)




தமிழ்நாடு அரசுப் பணிகளுக்கான ஆட்சேர்ப்புச் சுழற்சி தாமதம் ஏற்படா வண்ணம் 365 நாட்கள் முடிக்கச் சட்டப்படியான கால அட்டவணை உருவாக்கப்படும்.

---

# வேலைவாய்ப்பு தாமதச் சூழல் நிதி உதவி




வேலை தேடும் பட்டதாரிகளுக்கு ரூ. 4,000 மற்றும் டிப்ளமோ முடித்தவர்களுக்கு ரூ. 2,500 இளைஞர் நல நிதியாக வழங்கப்படும்.

---

# வெற்றி தொழில் பயிற்சி உத்தரவாதம்




ஆண்டுதோறும் 5 லட்சம் இளைஞர்களுக்குத் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து உதவித்தொகையுடன் கூடிய இன்டர்ன்ஷிப் பயிற்சிகள் வழங்கப்படும். அதன்படி, பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 10,000, ஐடிஐ (ITI) மற்றும் டிப்ளமோ படித்தவர்களுக்கு மாதம் ரூ. 8000 மாநில அரசே வழங்கும்.

---


# வெற்றி தொழில் முனைவோர் திட்டம்




இளைஞர்களை தொழில் முனைவோர்களாக மாற்ற ரூ. 25 லட்சம் வரை பிணையமில்லா தொழில் கடன் பெற அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும்.

---

# நமது ஊரில் நமக்கே வேலைவாய்ப்பு திட்டம்




75% தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைப் பணியமர்த்தும் தனியார் நிறுவனங்களுக்கு மாநில ஜிஎஸ்டி (SGST) மீது 2.5% மானியமும், மின் கட்டணங்கள் மீது 5% மானியமும் வழங்கப்படும். மேலும் அரசு கொள்முதலில் முன்னுரிமை அளிக்கப்படும்.

---

# இளைஞர்கள் பங்களிப்பில் நமது நல்லாட்சி




ஒவ்வொரு கிராம பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிலும் 'முதல்வர் மக்கள் சேவை நண்பர்' பதவியின் மூலம் 5 லட்சம் இளைஞர்களுக்குத் தலா ரூ. 18,000 ஊதியத்தில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இதன் மூலம் 100% அரசு சேவைகள் மக்களின் வீடு தேடி வர வழிவகை செய்யப்படும்.

---

# தமிழ்நாடு இளைஞர் ஆலோசனை குழு




இளைஞர்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் நேரடியாக அரசிடம் தெரிவிக்கத் தகுந்த தளமாக 'தமிழ்நாடு இளைஞர் ஆலோசனை குழு' நிறுவப்படும். இந்த முயற்சியைச் செயல்படுத்தும் இந்தியாவின் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழும்.

---

# படைப்பாளி தொழில்முனைவோர் திட்டம்




தமிழ்நாட்டை ஓர் உலகளாவிய படைப்பாளி மையமாக மாற்ற, 1.5 லட்சம் படைப்பாளி தொழில்முனைவோருக்குத் தொடக்க மூலதனம் வழங்கும் இத்திட்டத்தின் கீழ் நமது இளைஞர்களுக்கு நவீனகாலப் பயிற்சி அளிக்க 500 'படைப்பாளி பள்ளிகள்' (Creator preneur Schools) நிறுவப்படும்.

---